## November 9, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் வரும் டிசம்பர் 1-ஆம் தேதி தொடங்கி 19-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. கூட்டத்தொடரில் 15 அமர்வுகள் (நாள்கள்) இடம்பெற உள்ளன.
   i. பிகார் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் நவ.14-ஆம் தேதி வெளியாக உள்ளன. இதைத் தொடர்ந்து, நாடாளுமன்றம் கூடுவதால், அந்தத் தேர்தல் முடிவுகள் கூட்டத்தொடரில் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. முன்னதாக, நாடாளுமன்ற கூட்டத்தொடர் மழைக்கால கடந்த ஜூலை 21-ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 21 வரை நடை பெற்றது. மழைக்கால கூட்டத் தொடரில் 21 அமர்வுகள் இடம் பெற்றன.
2. புது தில்லி-ஷாங்காய் இடையிலான பயணிகள் விமானத்தை சைனா ஈஸ்டர்ன் என்ற சீன விமான நிறுவனம் ஞாயிற்றுக்கிழமை (நவ: 9) இயக்க உள்ளது. இதன்மூலம் இந்தியாவுக்கு நேரடி விமான சேவையை சீனா தொடங்க உள்ளது.
   i. இந்தியா- சீனா இடையிலான பயணிகள் விமான சேவை 2020-ஆம் ஆண்டு கரோனா பரவல் காரணமாக நிறுத்தப்பட்டது. பின்னர், அந்தச் சேவையை மீண்டும் தொடங்காததற்கு கிழக்கு லடாக் எல்லைப்பகுதியில் 4 ஆண்டுகளுக்கும் மேலாக இருநாட்டு ராணுவத்தினர் இடையே நிலவிய மோதல் போக்கு காரணமாக அமைந்தது. இந்த மோதல்போக்கு கடந்த ஆண்டு முடிவுக்கு வந்தது.
3. இந்தியாவின் சூரிய மின் உற்பத்தித் திறன் நடப்பு 2025-ஆம் ஆண்டில் 125 ஜிகாவாட்டைத் தாண்டி, உள்நாட்டு தேவையை மூன்று மடங்கு விஞ்சும் நிலையில் உள்ளது. இது குறித்து சந்தை ஆய்வு நிறுவனமான வுட் மெக்ரென்ஸி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
   i. இந்த இந்தியாவின் சூரிய மின் உற்பத்தித் திறன் நடப்பாண்டில் 125 ஜிகாவாட்டை தாண்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது. ஆண்டில் சூரிய மின் உற்பத்தி உள்நாட்டு தேவையைவிட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும். 2025 மூன்றாவது காலாண்டில் சூரிய மின்சக்தி இருப்பு 29 ஜிகாவாட்டாக இருக்கும்.
   ii. அரசின் உற்பத்திசார் ஊக்குவிப்பு திட்டத்தின் (பிஎல்ஐ) காரணமாக நாட்டின் சூரிய மின் உற்பத்தித் திறன் வெகுவாக அதிகரித்துள்ளது.
   iii. இருந்தாலும், இந்தத் தொழில் துறை அதிக திறன் சவால்களையும் எதிர்கொள்கிறது. அமெரிக் காவின் 50 சதவீத பரஸ்பர வரிகளால் 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஏற்றுமதி 52 சத வீதம் சரிந்தது. இதனால் தற்போது பல உற்பத்தியாளர்கள் அமெரிக்கா சார்பிலான விரிவாக்கத் திட்டங்களை நிறுத்தி, உள்நாட்டு சந்தையில் கவனம் செலுத்துகின்றனர்.
   iv. துறையில் நிலவும் போட்டியால் விலையிடலும் மிகச் சவாலாக உள்ளது. இறக்குமதி செய்யப்படும் செல்களைப் பயன்படுத்தி இந்திய நிறுவனங்கள் தயாரிக்கும் மின் உற்பத்தி மோடுல்கள், சீனாவில் இருந்து முழுமையாக இறக்குமதி செய்யப்படும் மோடுல்களை விட ஒரு வாட்டுக்கு ரூ.2.66 அதிகமாக உள்ளது. அரசு ஆதரவின்றி இந்தியாவில் தயாரிக்கப்படும் மின் உற்பத்தி மோடுல்களின் விலை சீன மோடுல்களை விட இரு மடங்கு இருக்கும்.
4. பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான எல்லையில் அமைதியை உறுதிசெய்வதற்காக துருக்கியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மீண்டும் தோல்வியடைந்தது.
   i. முக்கிய விவகாரங்களில் கருத்துவேறுபாடுகள் தொடர்ந்து நீடிப்பதால் எந்த உடன்பாடும் இல்லாமல் இந்தப் பேச்சு வார்த்தை நிறைவடைந்தது.

பாகிஸ்தானில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்திவரும் பாகிஸ்தான் தெஹ்ரீக்- இ-தலிபான் அமைப்பினர் தங்கள் நாட்டில் இருந்து செயல்படுவதைத் தடுப்பதாக எழுத்து மூலம் ஆப்கானிஸ்தான் ஒப்புதல் அளிக்காததே இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

5. இந்தியாவின் 91- ஆவது செஸ் கிராண்ட் மாஸ்டர் ஆனார் எஸ் வி.எஸ். ராகுல் ஆர்எம் ஐஎஸ்டி மாணவர் வி.எஸ்.ராகுல். பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் 6-ஆவது ஆசியான் தனிநபர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில் ஒரு சுற்று மீதமிருந்த நிலையில், சாம்பியன் பட்டம் வென்று இந்தியா வின் 91-ஆவது கிராண்ட் மாஸ்டர் அந்தஸ்தைப் பெற்றார். ஆசிய ஜூனியர் சாம்பியன் ஆன ராகுல் கடந்த 2021-இல் ஐ.எம் அந்தஸ்தைப்பெற் றிருந்தார். லைவ் ரேட்டிங் கில் 2400 புள்ளிகளை கடந்திருந்தார்.
6. ஐஎஸ்எஸ் எஃப் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதலில் இந்தியாவின் ரவீந்தர் சிங் தங்கமும், இளவேனில் வாலறிவன் வெண்கலமும் வென்றனர். எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் 50 மீ. பிஸ்டல் பிரி வில் இந்தியாவின் ரவீந்திர் சிங் 569 புள்ளிகளை ஈட்டி தங்கம் வென்றார்.
7. அடுத்த ஆண்டு இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) உச்சி மாநாடு நடைபெறவுள்ளதையடுத்து, அதன் முக்கிய நோக்கங்களை எடுத்துரைக்கும் முன்னோட்ட நிகழ்ச்சி அமெரிக்காவில் நடைபெற்றது.
   i. இந்த நிகழ்ச்சியை சியாட்டில் நகரில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.
   ii. தெற்குலக நாடுகளில் முதல் முறையாக ஏஐ தாக்கம் குறித்த மாநாடு 2026, பிப்.19, 20 ஆகிய தேதிகளில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்கள், அரசாங்க பிரதிநிதிகள், கல்வியாளர்கள், துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளனர்.
   iii. இந்நிலையில், இதை மேலும் பிரபலப்படுத்தும் விதமாக ‘அனைவருக்கும் ஏஐ', 'பெண்கள் மத்தியில் ஏஐ பயன்பாட்டை ஊக்குவித்தல்', '13-21 வயது வரையிலான இளைஞர்களின் ஏஐ கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்துதல்' ஆகிய மூன்று முன்னெடுப்புகளை அடுத்த இரண்டு மாதங்களில் மேற்கொள்ளவுள்ளதாக நியூயார்க்கில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது.
8. தீர்ப்புகளும், சட்ட ஆவணங்களும் உள்ளூர் மொழிகளில் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரதமர் மோடி, சட்டப் பயன்பாட்டு மொழி எளிமையாக்கப்பட வேண்டும் என்றார்.
   i. தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் 30-ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சி தில்லியில் நடைபெற்றது. உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி பி.ஆர். சுவாய், அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள சூர்ய காந்த் மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசிநார்.
9. கன்னியாகுமரி வரலாற்று பண்பாட்டு ஆய்வு மையத்தின் தலைவரும், ஆய்வுக் களஞ்சியம் மாத இதழின் ஆசிரியருமான முனைவர் எஸ்.பத்மநாபன் (91) கோவையில் காலமானார்.
   i. பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள அவர், 'கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் திருவள்ளுவர் பிறந்தார்' என்று தனது ஆய்வின் மூலம் உரைத்தவர்.